2023 அக்டோபர் 9]

இயந்திரங்கள் வேண்டுமோ அங்கே தந்து கொண்டிருக்கிறோம். அந்தவகையில், பாப்பிரெட்டிப்பட்டி அரசு மருத்துவமனைக்கும் அந்த RO system இயங்குமானால், அங்கிருக்கின்ற தேவைக்கேற்ப 3 அல்லது 4 dialysis இயந்திரங்கள் மிக விரைவில் பொருத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 209, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. பாலசுப்ரமணியன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

209—

பேருந்து வசதி

***58101—திரு. ஈ. பாலசுப்ரமணியன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம், பாரத ரத்னா M.G.R. புதிய பேருந்து நிலையத்திலிருந்து AVR ரவுண்டானா வழியாக புறவழிச் சாலையில் அம்மாபேட்டை ரவுண்டானா வரை பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம், பாரத ரத்னா M.G.R. புதிய பேருந்து நிலையத்திலிருந்து AVR ரவுண்டானா வழியாக புறவழிச் சாலையில் அம்மாபேட்டை ரவுண்டானா வரை புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்குவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. பாலசுப்ரமணியன் அவர்கள்.

முற்பகல் 11–30

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு முன்னாள்

முதலமைச்சர் அண்ணன் அவர்களை வணங்கி, பாரத ரத்னா M.G.R. பேருந்து நிலையத்திலிருந்து AVR ரவுண்டானா வழியாக புறவழிச் சாலையில் அம்மாபேட்டை வரை ஏற்கெனவே 1 ஆம் நம்பர் பேருந்து விடப்பட்டுவிட்டது. அந்த முக்கிய வழியில் பயணம் செய்யும் பயனாளிகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளதால் மேலும் ஒரு பேருந்து நான் கேட்டிருந்த நிலையில், அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டம் பரிசீலனையில் இல்லை என்று கூறுவது எப்படி என்று தெரியவில்லை. நாம் இந்தக் கேள்வி சம்பந்தமாக ஏற்கெனவே இங்கு பேசினோம். அதற்கு பின்பு 1 ஆம் number bus அங்கு விடப்பட்டு, மக்கள் அதில் பயணித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள வழித்தடமானது புதிய வழித்தடம். அவர் கோரியுள்ள பகுதிகளுக்கு ஏற்கெனவே பகுதி வாரியாகப் பேருந்து வசதி இருக்கிறது. சேலம் புறநகர் பேருந்து நிலையத்திலிருந்து A.V.R. ரவுண்டானா வழியாக 89 நகரப் பேருந்துகள்மூலம் 525 நடைகளும், சேலம் நகரப் பேருந்து நிலையம் முதல் அம்மாபேட்டை ரவுண்டானா வரை 35 நகரப் பேருந்துகள்மூலம் 179 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்து வசதியே போதுமானதாகும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 1 ஆம் நம்பர் பேருந்து விடப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார்கள். அந்தப் பேருந்து வழித்தடத்தில், அந்த bypass சாலையில் இருக்கின்ற பகுதிகளை இணைப்பதற்கு ஏற்கெனவே புறநகர் பேருந்துகள்தான் இயங்கி வந்தன. நகரப் பேருந்துகள் இல்லை. அப்படி நகரப் பேருந்துகளை அந்தப் பகுதியில் இயக்க வேண்டுமென்று சேலம் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள் ஏற்கெனவே கோரிக்கை வைத்தார்கள். அந்தக் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, அந்தத் தேவை அங்கு இருக்கிறது என்று உணர்ந்த காரணத்தினால் அனைத்து புறவழிச் சாலைகளையும் இணைக்கும் வகையில் சேலம் புறநகர் பேருந்து நிலையத்திலிருந்து 5 ரோடு, 3 ரோடு திருவாக்கவுண்டனார் bypass, கந்தம்பட்டி

2023 அக்டோபர் 9]

bypass, கொல்லாம்பட்டி bypass, சீலநாயக்கன்பட்டி bypass மற்றும் குமரகிரி bypass வழியாக அயோத்தியாப்பட்டணம் வரை புறவழிச் சாலையில் 14–10–2022 முதல் F1 A, F1 B, F1 C மற்றும் F1 D ஆகிய 4 பேருந்துகள் இயக்கம் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. இரா. இராஜேந்திரன் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இந்த நகரப் பேருந்துகள்மூலம் தினசரி 64 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. இவ்வழித்தடத்தில் தற்போது இயக்கப்பட்டு வரும் பேருந்து வசதியே போதுமானதாக உள்ளது. ஏற்கெனவே, சேலம் நகர எல்லைக்குள் 73 நகரப் பேருந்துகள்மூலம் தினசரி 643 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், சேலம் நகரப் பகுதியிலிருந்து சுற்றுவட்டார முக்கிய ஊர்களுக்கு 147 நகரப் பேருந்துகள்மூலம் தினசரி 1079 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேற்கண்ட பேருந்து வசதியே இவையெல்லாவற்றையும் இணைப்பதற்குப் போதுமானதாகும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. பாலசுப்ரமணியன் அவர்கள்.*

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஆட்சிக்காலத்திலே* Salem Smart City *திட்டத்தின்கீழ், சேலம் பழைய பேருந்து நிலையம் 2 அடுக்கு பேருந்து நிலையமாக மாற்றப்பட்டு மிகவும் பொலிவோடு இப்போது விளங்கிக் கொண்டிருக்கிறது. அந்தப் பேருந்து நிலையம் இப்போது திறக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பேருந்து நிலையத்திலிருந்து திருச்சி நெடுஞ்சாலை வழியாக சீலநாயக்கன்பட்டி ரவுண்டானா வந்து அங்கிருந்து அம்மாபேட்டை ரவுண்டானா வரை புதிதாக ஒரு பேருந்தை இயக்க அரசிடம் திட்டம் இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *ஏற்கெனவே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதுபோல, நகரப் பேருந்து நிலையத்திலிருந்து சீலநாயக்கன்பட்டி வழியாக அயோத்தியாப்பட்டணம் வரை இணைப்புப் பேருந்துகள்*

இருக்கின்றன. அயோத்தியாப்பட்டணத்திலிருந்து மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அம்மாபேட்டை பேருந்து நிலையத்திற்கு இணைப்புப் பேருந்துகள் இருக்கின்றன. எனவே, இந்தப் பேருந்துகளே போதுமானதாகும். இருப்பினும், இதுகுறித்து அதிகாரிகள் மூலமாக ஆய்வு செய்யப்படும். தேவை இருந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம் அவர்கள்.

திரு. இரா. மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் ஆட்சியிலே குளித்தலை நகரத்திலிருந்து சென்னைக்கு பேருந்து வேண்டுமென்று இந்த மாமன்றத்திலே நான் வைத்த கோரிக்கையை ஏற்று, அப்போது போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த அண்ணன் திரு. கே.என். நேரு அவர்கள் குளித்தலையிலிருந்து சென்னைக்கு bus விடப்படும் என்று அறிவித்து, அவர் குளித்தலை நகருக்கே வந்து bus-ஐ இயக்கிக் கொடுத்தார்கள். கடந்த ஆட்சிக்காலத்திலே அந்தப் பேருந்தை நிறுத்திவிட்டார்கள். தற்போது மீண்டும் அந்தப் பேருந்தை, நம்முடைய மாண்புமிகு தளபதியார் ஆட்சியிலே, கலைஞர் நூற்றாண்டு விழா நடக்கும் இந்நேரத்திலே அவருடைய தொகுதியில் இயக்கப்படுமா என்பதைத் தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்தப் பேருந்து வழித்தடம் இப்போது செயல்முறையில் இல்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். கடந்த ஆட்சிக் காலத்தில் நிறுத்தப்பட்டிருக்கிறது. அதுகுறித்து ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 210, மாண்புமிகு உறுப்பினர் திரு. G. அசோகன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.